www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | 1 | 1 | 4 | 2 | 3 | - |

## பொதுத் தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14×1=14

1. பாயிரம் இல்லது ........... அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2. 'மஞ்ஞை' என்ற சொல்லின் பொருள் ..........
அ) மயில் ஆ) கிளி இ) உள்ளான் ஈ) காகம்

3. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
அ) மதிப்புக்கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
i) அ மட்டும் சரி ii) ஆ - மட்டும் சரி
iii) இரண்டும் சரி iv) அ - தவறு, ஆ - சரி

4. 'சுடச்சுட' - என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) இரட்டைக்கிளவி ஆ) பெயரெச்சம் இ) வினையெச்சம்
ஈ) அடுக்குத்தொடர்

5. 'யானை டாக்டர்' என்னும் குறும்புதினத்தின் ஆசிரியர்
அ) சிவராமன் ஆ) ஜெயராமன் இ) ஜெயமோகன் ஈ) வேணுமோகன்

6. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

7. தெற்றிப் பள்ளிகள் என அழைக்கப்பட்டவை
அ) புத்தப் பள்ளிகள் ஆ) சமணப் பள்ளிகள்
இ) அறங்கூர் அவையம் ஈ) திண்ணைப் பள்ளிகள்

8. சரியானதைத் தேர்வு செய்க.
அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம்
இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்
i) அ, ஆ, இ - சரி - ஈ - தவறு ii) அ, ஆ, ஈ - சரி - ஆ - தவறு
iii) அ, ஆ, ஈ - சரி - ஆ - தவறு iv) அ, ஆ, ஈ - சரி - இ - தவறு

9. 'இந்தியாவின் பெப்பிசு' என்று அழைக்கப்படுபவர்
அ) ஜான் ரஸ்கின் ஆ) சாமுவேல் பெப்பிசு இ) ஆற்காடு நவாபு ஈ) ஆனந்தரங்கர்

10. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, இடைநிலை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
பகுதி, சந்தி விகாரம் . ஈ) பகுதி, விகுதி

11. கோடு, மலை, சிகரம், விளிம்பு, எல்லா முதலிய பொருள்களைத் தரும் சொல்
அ) மரை ஆ) திரை இ) வரை ஈ) உரை

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12. ஆசிரியப்பாவின் ஓசை

அ) அகவலோசை ஆ) செப்பலோசை இ) துள்ளல் ஓசை ஈ) தூங்கலோசை

13. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ........... தினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

14. ஒட்டுப் போடாத ஆகாயம் போல - இந்த

உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

## பகுதி - II

### *பிரிவு - 1*

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3×2=6

15. "பாயிரம்" பற்றி நீவிர் அறியும் கருத்து யாது?

16. தமிழர்கள் புகழையும், பழியையும் எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

17. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது? அவை யாவை?

18. இங்கே ஐம்பதாண்டு வேம்பு

கோடையில் கொட்டும் பூக்களை

எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள்

யார்? எண்ணுபவர்கள் யார்?

### *பிரிவு - 2*

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2×2=4

19. தமிழ்நாட்டின் மாநில மரம் எது? ஏன்?

20. மொழி குறித்து எர்னஸ்ட் காசிரர் கருத்து யாது?

21. சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலை குறித்து இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

### *பிரிவு - 3*

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி: 7×2=14

22. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:*

அ) நெருங்கின ஆ) விடுத்தல்

23. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*

அ) இழுக்கின்றி ஆ) மனையென

24. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

25. *கலைச்சொற்களைத் தமிழில் எழுதுக:*

invasion, Sailor

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:

உலை, உளை, உழை

27. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க :* எட்டுவரை

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



28. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*

குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

29. *மரபுப்பிழையை நீக்கி எழுதுக:*

மாந்தோட்டத்தில் குயில் அகவ காகம் கத்தியது.

30. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

## பகுதி - III

### *பிரிவு - 1*

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8

31. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.
32. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" - உவமையைப் பொருளுடன் விளக்குக.
33. மருந்து, மருத்துவர், மருத்துவம் பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?
34. அழகிய பெரியவன் - குறிப்பு வரைக.

### *பிரிவு - 2*

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8

35. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீவிர் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
38. நேரடி மொழி குறித்து இந்திரன் கூறும் கருத்துகள் யாவை?

### *பிரிவு - 3*

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×4=12

39. உருவக அணி (அல்லது) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. *இலக்கிய நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக):*

உண்ணும் உணவுக்கு ஏங்காமல்
　　உடுக்கும் ஆடைக்கு அலையாமல்
பண்ணும் தொழில்கள் பல காண்போம்
　　பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்
அண்ணல் காந்தி வழிபற்றி
　　அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்
எண்ணும் அன்பர் உளம் தாங்கும்
　　இறைவா! துணைசெய் தருள்வாயே

*- கவிமணி*

41. *பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:*

அ) சிறுதுரும்பும் பல்குத்த உதவும்.

(அல்லது)

ஆ) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42. மழை (அல்லது) குழந்தை என்ற தலைப்பில் ஒரு கவிதை வரைக.

43. தமிழாக்கம் தருக :

1. A nation's culture resides in the hearts and in the soul of its people.
2. Cultures does not make people. People make culture.
3. Art is long and life is short.
4. Failure is the stepping stone to success.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 3×6=18

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை தென்கரை நாட்டுப்பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும், எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்று விவரிக்க.

(அல்லது)

ஆ) தாம் வாழ்ந்த காலக்கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் என்பதை நிறுவுக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை?

## பகுதி - V

47. அடிபிறழாமல் எழுதுக: 4+2=6

அ) "ஆக்கியோன் .......... இயல்பே - என்ற நன்னூல் பாயிரப்பாடல்.

ஆ) 'உணின்' என முடியும் குறள்.

----------

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com